மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அசல் வழக்கு எண்.1/2023 நாள்– 11.08.2023

வாதியின் / பிரதிவாதியின் ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.A.C. பிரகாஷ், இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்– பொன்ராஜ் (வா.சா.1) | தந்தையின் பெயர்– |
| விலாசம்– | தாலுகா– |
| வயது– | தொழில் |
| ஜாதி– | சமயம்– |

நான் இந்த வழக்கின் வாதியாவேன். எனது முதல் விசாரணையை சாட்சியமான எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யாவும் உண்மையானவை. மேலும் அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவைதான். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். எனது தரப்பு ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

1) 5.10.2021 – வாதியின் தாயார் முத்துலட்சுமி பெயரில் உள்ள பட்டா (பட்டா எண்.526) – நகல் – வா.சா.ஆ.1 (4 மற்றும் 5 ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையோடு குறியீடு செய்யப்படுகிறது. ஆட்சேபணைக்கான காரணமாவது நகல் என்பதாகும்)

2) 29.11.1989 – முத்துலட்சுமி இறப்பு சான்று –உண்மை நகல் – வா.சா.ஆ.2

3) 7.8.2007 – நில உரிமை அனுபவ சான்று – நகல் – வா.சா.ஆ.3 (4 மற்றும் 5 ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையோடு குறியீடு செய்யப்படுகிறது. ஆட்சேபணைக்கான காரணமாவது நகல் என்பதாகும்)

4) 26.11.2022 – வாதி தனது வழக்கறிஞர் மூலமாக 4ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு – அலுவலக நகல் – வா.சா.ஆ.4

5) 28.11.2022 – வாதி அனுப்பிய அறிவிப்பை 4ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை – அசல் – வா.சா.ஆ.5

6) 21.9.2022 – வில்லங்கச்சான்று – அசல் – வா.சா.ஆ.6

7) 15.12.2022 – முத்துலட்சுமி வாரிசு சான்று –பதிவிறக்க நகல் – வா.சா.ஆ.7

8)18.12.2020 – 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் 4 மற்றும் 5 பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் – பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல்– வா.சா.ஆ.8

பிராதில் கோரியபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி கு.வி ஒத்திவைக்கப்படுகிறது)